Teachingninja.in

Latest Govt Job updates

Private Job updates

Free Mock tests available

Visit - teachingninja.in

# TNPSC
# ACF

## Previous Year Paper
## (TET)
## 13 Oct, 2023

Teachingninja.in

**ACFMTE-23**

Don't write anything in this space

தேர்வு : தமிழ்நாடு வனப் பணி (தொகுதி-IA)-உதவி வனப் பாதுகாவலர் பதவிக்கான முதன்மைத் தேர்வு

பாடம் : கட்டாய தமிழ் மொழி தகுதித் தாள் (பத்தாம் வகுப்புத் தரம்) (தாள் – I) (விரிந்துரைக்கும் வகை)

தேர்வு நாள் : 13.10.2023 மு.ப.

Booklet Serial No. :

Don't write anything in this space

தேர்வு : தமிழ்நாடு வனப் பணி (தொகுதி-IA)-உதவி வனப் பாதுகாவலர் பதவிக்கான முதன்மைத் தேர்வு

பாடம் : கட்டாய தமிழ் மொழி தகுதித் தாள் (பத்தாம் வகுப்புத் தரம்) (தாள் – I) (விரிந்துரைக்கும் வகை)

தேர்வு நாள் : 13.10.2023 மு.ப.

பதிவு எண் :

விண்ணப்பதாரரின் கையொப்பம் மற்றும் தேதி

**சான்று**

நான் இந்த வினா விடைத் தொகுப்பை விண்ணப்பதாரரின் பதிவு எண், புகைப்படம் மற்றும் கையொப்பம் ஆகியவற்றை நுழைவுச்சீட்டினில் சரிபார்த்த பின் வழங்கினேன்.

அறைக்கண்காணிப்பாளரின் கையொப்பம் மற்றும் தேதி

**சான்று**

நான் இந்த வினா விடைத் தொகுப்பில் பதில் அளிக்காத விடைப் பகுதிகளை தேர்வு எழுதப் பயன்படுத்திய கருப்பு மை பேனாவினால் குறுக்குக் கோடிட்டுள்ளேன் என உறுதியளிக்கிறேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம் மற்றும் தேதி

Teachingninja.in

Do not use this area

Teachingninja.in

Teachingninja.in
Do not use this area



Teachingninja.in

# தாள் – I

# கட்டாய தமிழ் மொழி தகுதித்தாள்

## (விரிந்துரைக்கும் வகை)

## (பத்தாம் வகுப்புத் தரம்)

கால அளவு : மூன்று மணி நேரம் மொத்த மதிப்பெண்கள் : 100

(இவ்வினா-விடைத்தாள் தொகுப்பு 32 பக்கங்களைக் கொண்டுள்ளது)

**அறிவுரைகள்**

(கீழ்க்கண்ட அறிவுரைகளை விண்ணப்பதாரர்கள் தவறாமல் பின்பற்ற வேண்டும்)

1. தாள்-Iஇல் குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்கள் 40 பெற்றால் மட்டுமே தாள்-II, தாள்-III, தாள்-IV மற்றும் தாள்-V ஆகியன மதிப்பீடு செய்யப்படும்
2. விண்ணப்பதாரர்கள், இவ்வினா-விடைத்தாள் தொகுப்பு மொத்தம் 32 பக்கங்களைக் கொண்டுள்ளது என்பதை முதலில் உறுதி செய்து கொள்ள வேண்டும். இத்தொகுப்பில் ஏதேனும் குறைபாடிருப்பின், உடனடியாக வேறு தொகுப்பைத் தேர்வுக் கண்காணிப்பாளரிடம் கோரிப் பெற்றுக் கொள்ள வேண்டும்.
3. இத்தேர்வைப் பொறுத்தவரை, அழகாக எழுதுவதற்காகத் தனியாக மதிப்பெண்கள் ஒதுக்கப்படவில்லை.
4. ஒவ்வொரு வினாவிற்கும் தனித்தனியாக விடை எழுதுவதற்கென இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு வினாவிற்கும் விடையளிக்க ஒதுக்கப்பட்ட இடத்தில் மட்டுமே விடையளிக்க வேண்டும். விடையளிக்க ஒதுக்கப்பட்ட கட்டத்திற்கு வெளியே எதையும் எழுதக்கூடாது.
5. விண்ணப்பதாரர்கள் தங்களது பதிவெண்ணை இத்தொகுப்பில் எந்த இடத்திலும் எழுதக்கூடாது. இந்த அறிவுரையை மீறும் விண்ணப்பதாரர்களுக்கு உரிய தண்டனை விதிக்கப்படும்.
6. விண்ணப்பதாரர்கள் விடையளிக்கும் போது வினா எண்ணையும், அதன் உட்பிரிவையும் தவறாமல் குறிப்பிட வேண்டும்.
7. விண்ணப்பதாரர்கள் இந்த வினா-விடைத் தொகுப்பிலிருந்து எந்தத் தாளையும் கிழித்துவிடக் கூடாது.
8. விண்ணப்பதாரர்கள் வினாத்தாளின் ஒவ்வொரு பிரிவிலும் அறிவுறுத்தப்பட்டுள்ள எண்ணிக்கையிலான வினாக்களுக்கு மட்டுமே விடையளிக்க வேண்டும். அதற்கு மிகையான எண்ணிக்கையிலான வினாக்களுக்கு விடையளித்தால், ஒவ்வொரு பிரிவின் முடிவிலும் மிகையான எண்ணிக்கையில் விடையளிக்கப்பட்டவை கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.
9. விண்ணப்பதாரர்கள் கடித வடிவிலான வினாக்களுக்கு விடையளிக்கும் பொழுது தங்களது பெயரையோ, பதிவெண்ணையோ எழுதக்கூடாது. தங்களது பெயரில் கையொப்பமிடவும் அனுமதியில்லை. அவ்வாறான வினாக்களுக்கு பதிலளிக்கும்பொழுது வினாக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர் மற்றும் முகவரியையே பயன்படுத்த வேண்டும்.

   வினாக்களில் பெயர், முகவரி ஆகியவை குறிப்பிடப்படவில்லையெனில், 'அனுப்புநர்', 'பெறுநர்' முகவரிகளில் அ ஆ இ அல்லது எக்ஸ் ஒய் இசட் அல்லது எக்ஸ் எக்ஸ் எக்ஸ் போன்ற பொதுப் பெயர்களை மட்டுமே எழுத வேண்டும்.

---



Teachingninja.in

Teachingninja.in
Do not use this area



Teachingninja.in

### அலகு — 1 (அ)

*குறிப்பு :* **i)** கொடுக்கப்பட்ட தமிழ்ப் பகுதியை நன்கு படித்து கருத்துச் சிதையாமல் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கவும் :

**(1 × 10 = 10)**

| | |
|---|---|
| Q.No. 1 | (1) கல்வியானது சமூக முன்னேற்றத்தின் அடித்தளமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.<br>(2) இல்லங்கள், கோயில்கள், பாடசாலைகள் மற்றும் குருகுலங்கள் ஆகிய இடங்களில் அப்பகுதிக்கேற்ற கல்வி வழங்கப்பட்டு வந்தது.<br>(3) இஸ்லாமியக் கல்வியை அறிமுகப்படுத்தியதன் மூலம் இடைக்காலத்தில் கல்வி ஒரு மாற்றத்தைக் கண்டது<br>(4) இடைக்காலத்தின் பிற்பகுதியில் ஆங்கிலேயர்கள் இந்தியாவிற்கு வருகை புரிந்து ஆங்கிலக் கல்வியை அறிமுகப்படுத்தினர்.<br>(5) சுதந்திரத்திற்குப் பிறகு, 1968 ஆம் ஆண்டு முதலாவது தேசியக் கல்விக் கொள்கையானது இந்தியக் கல்வி வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்தியது. |

### அலகு — 1 (ஆ)

*குறிப்பு :* **ii)** கொடுக்கப்பட்ட ஆங்கிலப் பகுதியை நன்கு படித்து கருத்துச் சிதையாமல் தமிழில் மொழிபெயர்க்கவும் :

**(1 × 10 = 10)**

| | |
|---|---|
| Q.No. 2 | The Kushan period corresponded with the last days of the Roman Republic, when Julius Caesar was alive. The Kushan Empire is said to have sent an embassy to Augustus Caesar who succeeded Julius.<br><br>The corresponding period $4^{th}$ and $5^{th}$ A.D. (C.E.) in South India, characterized as Kalabhra period. Teakwood, pepper, pearls, ivory, brocades and precious stones and the like were exported from the Malabar Coast to Babylonia, Egypt, Greece and Rome. Trade with Rome further flourished.<br><br>Eighteen major works of Sangam age viz eight Anthologies (Ettuthogai) and Ten Idylls (Pathupattu) compiled during the first three centuries of common era were composed during this period. Sangam Literature hailed as first secular literature of India. |



Teachingninja.in

## அலகு — 2

*குறிப்பு :* **i)** **கொடுக்கப்பட்ட பகுதியை அதன் அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவில் சுருக்கி உங்கள் சொந்த நடையில் எழுதுக. தலைப்பு தேவையில்லை.**

**(1 × 10 = 10)**

| | |
|---|---|
| Q.No. 3 | மயில் வடிவுள்ள கூட்டுக்குள் ஒருவர் தன் உருவத்தை மறைத்துக்கொண்டு, நையாண்டி மேளத்திற்கேற்ப ஆடும் ஆட்டமே மயிலாட்டமாகும். நையாண்டி மேளம் இசைக்க, காலில் கட்டப்பட்டுள்ள சலங்கை ஒலிக்க மயிலின் அசைவுகளை ஆடிக்காட்டுவர்.<br><br>இருமுனைகளிலும் சம எடைகளைக் கட்டிய தண்டினைத் தோளில் சுமந்து ஆடுவது காவடியாட்டம். கா – என்பதற்குப் பாரந்தாங்கும் கோல் என்று பொருள். மரத்தண்டு, மூங்கில் குச்சி, பட்டுத்துணி மற்றும் மயிலிறகுக் கற்றைகளைக் கொண்டு காவடி உருவாக்குகின்றனர்.<br><br>ஒரே நிறத் துணியை முண்டாசுபோலக் கட்டியும் காலில் சலங்கை அணிந்தும் கையில் வைத்துள்ள சிறுதுணியை இசைக்கேற்ப வீசியும் ஒயிலாக ஆடும் குழு ஆட்டமே ஒயிலாட்டம். இதில் கம்பீரத்துடன் ஆடுதல் என்பது தனிச்சிறப்பானது.<br><br>தேவராட்டம், வானத்துத் தேவர்கள் ஆடிய ஆட்டம் எனப் பொருள் கொள்ளப்படுகிறது. ஆண்கள் மட்டுமே ஆடக்கூடிய ஆட்டம். உறுமி எனப்படும் 'தேவதுந்துபி' தேவராட்டத்திற்குரிய இசைக்கருவி. இவ்வாட்டத்தில் எட்டு முதல் பதின்மூன்று கலைஞர்கள் கலந்து கொள்ள வேண்டுமென்பது பொது மரபு. |

## அலகு — 3

*குறிப்பு :* **i)** **கொடுக்கப்பட்டுள்ள பத்தியை நன்கு படித்து அதன் கீழ் கேட்கப்பட்டுள்ள ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

**ii)** **ஒவ்வொரு வினாவிற்கும் இரண்டு மதிப்பெண்கள்.**

**(5 × 2 = 10)**

| | |
|---|---|
| Q.No. 4 | சோழர் படையின் தாக்குதலைக் கண்ட கலிங்கர், இஃது என்ன மாய வித்தையா என வியந்தனர். தம்மை எரிக்க வந்த தீயோ என அஞ்சினர். சோழர்படை தம் உயிரைப் பறிக்கும் காலனோ என அஞ்சினர். தமது இறுதிக் காலம் நெருங்கிவிட்டதோ என எண்ணி, அலைந்து குலைந்து நடுங்கினர்.<br><br>அப்படி நடுங்கிய கலிங்கப் படையினர் படைக் கூட்டத்திலிருந்து விலகி ஓடினர். சிலர் கடலில் தாவிக் குதித்துத் தப்பினர். சிலர் யானைகளின் பின்னே மறைந்து கொண்டனர். எத்திசையில் செல்வது எனத் தெரியாமல் செல்வதற்கு அரிதான மலைக் குகைகளினுள்ளும் புதர்களுக்குள்ளும் தப்பி ஓடினர்.<br><br>கலிங்க வீரர்கள் ஒருவரை ஒருவர் முந்திக் கொண்டு ஓடினர். தம் நிழலையும் மற்றவர் நிழலையும் கண்டு தமிழர்கள் துரத்தி வருவதாக எண்ணி அஞ்சினர். தஞ்சம் வேண்டி வணங்கினர்.<br><br>சோழ மன்னனின் படையிலுள்ள யானைகள் சினமுற்று இடியைப் போலப் பிளிறின. அவ்வோசையைக் கேட்டு அஞ்சிய வீரர்கள் இருள் நிறைந்த குகைக்குள் சென்று மறைந்தனர். ஏனையோர் புறமுதுகு காட்டி ஓடிப் பிழைத்தனர். |
| 1. | தமிழில் முதல் முதலில் எழுந்த பரணி நூல் எது? |
| 2. | பரணி இலக்கியம் குறிப்பு தருக. |
| 3. | சோழ வீரர்களைக் கண்டு கலிங்கர் எவ்வாறு நடுங்கினர்? |
| 4. | கலிங்க வீரர்கள் எவ்வாறு அஞ்சி ஓடினர்? |
| 5. | சோழனின் யானைப் படையைக் கண்ட வீரர்களின் செயல்கள் யாவை? |



Teachingninja.in

## அலகு — 4

*குறிப்பு :* **i)** கொடுக்கப்பட்டுள்ள சுருக்கக் குறிப்புக்களைக் கொண்டு விரிவாக எழுதுக.

**ii)** **300** வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். **(1 × 10 = 10)**

| | |
|---|---|
| Q.No. 5 | நீரின்றி அமையாது உலகு – நீர் நிலைகள் அடிப்படை – நீர்ப்பற்றாக்குறை ஏற்படக் காரணம் – நீரைச் சேமிக்கும் வழிகள் – மழை நீரை சேமித்தல் – நிலத்தடி நீரை – சேமித்தல் – அதற்கான வழிமுறைகள் |

## அலகு — 5

*குறிப்பு :* **i)** திருக்குறள் தொடர்பான கட்டுரை வரைக.

**ii)** கொடுக்கப்பட்டுள்ள ஐந்து வினாக்களில் ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளிக்கவும்.

**iii)** **300** வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

**(1 × 15 = 15)**

| | | |
|---|---|---|
| Q.No. 6 | (அ) | சமய நல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டாகத் திருக்குறள் விளங்குவதை எடுத்துரைக்க. |
| | (ஆ) | 'வளமான வாழ்க்கைக்கு வள்ளுவம்' – கூறும் வழிமுறைகளைச் சான்றுடன் விளக்குக. |
| | (இ) | 'வள்ளுவரின் மானுட மேம்பாட்டுச் சிந்தனை' – குறித்துக் கட்டுரைக்க. |
| | (ஈ) | 'திருக்குறளும் மானுட விழுமியங்களும்' – கட்டுரைக்க. |
| | (உ) | 'திருவள்ளுவரும் புலால் மறுத்தலும்' – கட்டுரை வரைக. |

## அலகு — 6

*குறிப்பு :* **i)** கடிதம் வரைதல்

**ii)** கொடுக்கப்பட்ட மூன்று வினாக்களில் ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளிக்கவும்.

**iii)** **250** வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

**(1 × 15 = 15)**

| | | |
|---|---|---|
| Q.No. 7 | (அ) | நெகிழி (plastic) பொருட்களின் பயன்பாட்டினால் ஏற்படும் சீர்கேடுகளைச் சரிசெய்ய, "Message on wheels" என்ற திட்டத்தின்படி, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை இயக்குநர் ரூ. 64 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கி, விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குரிய அரசு ஆணையை வரைக. |
| | (ஆ) | தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநரின் ஆணைப்படி கல்லூரிகளில் ஆட்சி மொழி முனைப்புத் திட்டம் சரிவர இயங்குகிறதா என்பதை கல்லூரிக் கல்வி இயக்குநர் அறியும் வகையில் அறிக்கை ஒன்றைத் தயார் செய்க. |
| | (இ) | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் ஆட்சிமொழி முனைப்புத்திட்டத்தினை செயல்படுத்தும் விதத்தில் கோப்புகள் தமிழில் கையாளப்படுகின்றனவா? என்பதை அறியும் வகையில் உயர்கல்வித் துறை அரசு முதன்மைச் செயலரிடம் தகவல் பெறும் வகையில் கடிதம் ஒன்றை எழுதுக. |



Teachingninja.in

## அலகு — 7

*குறிப்பு :* **i)** பின்வரும் ஐந்து பிரிவுகளில் ஒவ்வொரு பகுதியிலும் நான்கு வினாக்கள் உள்ளன.

**ii)** ஒவ்வொரு பிரிவிலும் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

**iii)** ஒவ்வொரு பகுதிக்கும் நான்கு மதிப்பெண்கள்.

**iv)** ஐந்து பிரிவுகளுக்கும் சேர்த்து மொத்தம் இருபது மதிப்பெண்கள்.

**(5 × 4 = 20)**

| Q.No. | |
|---|---|
| Q.No. 8 | **கீழ்க்காணும் சொற்களை உமது சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக.** |
| | (1) பசுமரத்தாணி போல |
| | (2) உள்ளங்கை நெல்லிக்கனி போல |
| | (3) அத்திப்பூத்தாற் போல |
| | (4) மழை முகம் காணா பயிர் போல |
| Q.No. 9 | **கீழ்வரும் இணைச் சொற்களைப் பயன்படுத்தித் தொடர் அமைக்க** |
| | (1) கலை - களை |
| | (2) அழை - அலை |
| | (3) குரல் - குறள் |
| | (4) மான் - மாண் |
| Q.No. 10 | **பிரித்தெழுதுக.** |
| | (1) மட்டுமல்ல |
| | (2) மட்பாண்டம் |
| | (3) கயிற்றுக் கட்டில் |
| | (4) முன்பெல்லாம் |
| Q.No. 11 | **எதிர்மறை வாக்கியமாக மாற்றி எழுதுக.** |
| | (1) இரவு கடுமையாக மழை பெய்தது |
| | (2) இன்று பேருந்துகள் ஓடாது |
| | (3) குழாயில் நீர் வரவில்லை |
| | (4) மல்லிகை குளத்தில் பூக்கும் மலர் |



Teachingninja.in

| Q.No. 12 | பிழைநீக்கி எழுதுக : | |
|---|---|---|
| | (1) | வெட்டுக்கிளிக்கு உற்சாகம் தளைக்கு ஏறியது. |
| | (2) | நீங்கள் வருமையில் வாழ்ந்தாலும் இரவில் நன்றாக உறங்குதல் வேண்டும். |
| | (3) | மக்களின் வாழ்வுக்குத் தேவையான நீதிகளைச் சுட்டுக்காட்டுவதால் இந்நூல் நீதிநெறி விளக்கம் எனப் பெயர் பெற்றது. |
| | (4) | கற்றவருக்கு அழகு தருவது கள்வி. |



Teachingninja.in